சுருக்கம்

வேளாண்மைத் துறை – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் – திருச்சி மாவட்டம், குமுளூரில் உள்ள வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.20.00 கோடி செலவில் வேளாண் தொழில் நுட்பத்திறன் மேம்பாட்டு மையம் அமைத்தல் – நிர்வாக அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (ப.க) த்துறை

அரசு ஆணை (நிலை) எண்.76 நாள்:24.03.2015

திருவள்ளுவர் ஆண்டு 2046, பங்குனி 10

படிக்க:

1. பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அவர்களின் கடித எண்.டி.பி.எம்./ எப்.216/7/குமுளூர்/ 21182/ அறிவிப்புகள்– வேளாண் தொழில் நுட்பத்திறன் மேம்பாட்டு மையம், குமுளூர்/2014, நாள் 24.10.2014.
2. பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அவர்களின் கடித எண். எப்.216/ என்.ஏ.டி.பி – வேளாண் தொழில் நுட்பத்திறன் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான கருத்துரு/2015, நாள் 06.03.2015.

ஆணை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110–இன் கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 07.08.2014 அன்று கீழ்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"நவீன வேளாண்மையில் விதைப்பு முதல் அறுவடை மற்றும் சந்தைப்படுத்துதல் வரையிலான பல்வேறு வேளாண் பணிகளுக்கு திறன் மேம்பாட்டுடன் கூடிய மனித வள ஆற்றல் அவசியமாகிறது. எனவே, மனித வளஆற்றலை அதிகரிக்கும் வகையில் வேளாண் திறன் மேம்பாட்டு மையம் ஒன்று துவக்கப்படும். இதன் மூலம் வரும் 10 ஆண்டுகளில் 20 கோடி ரூபாய் செலவில் பத்தாயிரம் கிராமப்புற இளைஞர்களுக்கு 1 வருட சான்றிதழ் படிப்பு பயிற்றுவிக்கப்படும்."

2. மேலே படிக்கப்பட்டுள்ள கடிதங்களில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் அவர்கள் திருச்சி மாவட்டம் குமுளூரில் உள்ள வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.20.00 கோடி செலவில் வேளாண் தொழில் நுட்பத்திறன் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார். அதன்படி, வேளாண்மைத் துறையில் திறன் மேம்பாடு அடைந்த இளைஞர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளதென்றும், நவீன வேளாண்மையில் தொழில் நுட்பங்களை நடைமுறைபடுத்துவதற்கும், நவீன இயந்திரங்களை பயன்படுத்துவதற்கும், பராமரிப்பதற்கும், பழுது பார்ப்பதற்கும் தேவையான தொழில் நுட்பத்திறன் பெற்றவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய கட்டாயச் சூழல் உள்ளது எனத் தெரிவித்துள்ளார். ஆகவே, நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் நவீன இயந்திரங்களை பயன்படுத்துவதற்கும், தொழில் நுட்பத்திறனை அதிகரிக்கவும், தமிழகத்தில் மாவட்டம் வாரியாக வேளாண் பல்தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைக்கப்படுதல் அவசியமாகிறது எனத் தெரிவித்துள்ளார்.

3. மேலும், இத்திட்டத்தில் முதற்கட்டமாக, வேளாண்மை சார்ந்த நடவடிக்கை மற்றும் இடுபொருட்கள் உபயோகத்தில் திறனை அதிகரித்து, உற்பத்தியைப் பெருக்க இயந்திரமயமாக்கலை ஊக்குவிக்க வேளாண் தொழில் நுட்ப திறன் மேம்பாட்டு மையம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள குமுளூர் வேளாண் பொறியியல் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ரூ.20.00 கோடி செலவில் நிறுவப்படும். மாவட்டங்களில் உள்ள கிராமப்புற இளைஞர்களுக்கு இதில் சான்றிதழ் பயிற்சிகள் தரப்படும். இதன் மூலம், வேளாண் கருவிகள் இயக்குதல், பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் ஆகியவற்றில் 10000 சான்றிதழ் பயிற்சி பெற்றவர்களை பத்து ஆண்டுகளில் உருவாக்கப்படுவார்கள் எனத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்கிறது. அதன்படி, திருச்சி மாவட்டம் குமுளூரில் உள்ள வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண் தொழில் நுட்பத்திறன் மேம்பாட்டு மையத்தினை அமைப்பதற்கு நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலும், வேளாண் தொழில் நுட்பத்திறன் மேம்பாட்டு மையம் அமைப்பதற்கான செலவுகளை படிப்படியாக மேற்கொள்ளவும், 2015-2016-ஆம் நிதியாண்டிலிருந்து தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து செலவுகள் மேற்கொள்ள ஏதுவாக உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பதிவாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறை அ.சா.எண். 47/இ.செ.( A.R ) /2015, நாள் 13.03.2015-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி )

ராஜேஷ் லக்கானி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

பெறுநர்
பதிவாளர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 3.
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 5
வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர்-3.
செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிபகுதிப் மேம்பாட்டு முகமை,கிண்டி, சென்னை-32.
தலைமைப் பொறியாளர்,(வேளாண்மைப் பொறியியல்), நந்தனம், சென்னை-35.
மாவட்ட ஆட்சியர், திருச்சி மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், (பொது (ம) சமூக திட்டம் ஆய்வு), சென்னை – 18.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை) சென்னை – 18.

<u>நகல்:</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு வீட்டுவசதி , நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர், சென்னை – 9.
வேளாண்மை (வே.உ.1/அ.ந.மு.3) த் துறை, சென்னை-9.
நிதித் (வேளாண்மை) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

24-3-15
பிரிவு அலுவலர்
24-3-15